Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**தினத்தளம்**

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 98 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 08.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மொழியை அழித்தால், நம் அடையாளத்தை அழித்துவிடலாம் என நினைக்கிறார்கள்



## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

விருதுநகர்:

200 தொகுதிகளில் வெல்வதேநம்இலக்கு; அதற்கு நீங்கள் தயாராகஇருக்கவேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். விருதுநகர் கல்குறிச்சியில் நடைபெறும் திமுக தென்மண்டல இளைஞரணி மாநாட்டில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்; விருதுநகர் என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது கல்விக்கண் திறந்த காமராசர்தான். திராவிட மாடல் என்று சொன்னால் எல்லோருக்கும் நினைவுக்கு வருவது காலை உணவுத் திட்டம்; காமராசர் என்று சொன்னால் மதிய உணவு திட்டம்போல் திராவிட மாடல் ஆட்சி என்றால் காலை உணவு திட்டம்;

விருதுநகரில் மாநாடு நடந்தால் அடுத்து வரும் தேர்தலில் நமக்கு வெற்றி உறுதியாகியுள்ளது. 200 தொகுதிகளில் வெல்வதேநம்இலக்கு; அதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். புதிய சாதனை படைக்க நீங்கள் தயாரா; அதற்காக உழைக்க நீங்கள் தயாரா? நான் தயார். இளைஞரணி தொடங்கப்பட்ட போது விருதுநகர் மாவட்டத்தில் எனது காலடி படாத கிராமமே இல்லை. விருதுநகர் மண்ணில் மருது சகோதரர்கள்போன்று பணியாற்றிய கே.கே. எஸ்.எஸ்.ஆர், தங்கம் தென்னரசுக்கு எனது பாராட்டுகள்.

மும்மொழிக் கொள்கைஎன்றபெயரில் இந்தியை திணிக்கும் கத்தி நம் தலை மீதுதொங்கிக்கொண்டிருக்கிறது. தமிழ் மொழியை அழித்தால் நமது அடையாளத்தை அழித்து விடலாம் என்று பாஜக நினைக்கிறது. நீட்டை கொண்டுவந்து நம்மை படிக்கவிடாமல் பழைய நிலைக்கு கொண்டு செல்ல பாஜக திட்டமிடுகிறது. தமிழ் மொழிக்கு ஆபத்து வந்தபோதெல்லாம் போராடி தடுத்துள்ளோம். இந்தியா என்பது ஒரு கூட்டமைப்பு; வாய்ப்புகளை மறுத்த அநீதியை சமூக நீதியால் வென்றோம். மாநிலங்களுக்குஅதிகாரம்இல்லாதநிலைதான் முதலில் இருந்தது.

மாநிலங்களுக்கு ஓரளவுக்காவது அதிகாரம் கிடைக்க நடவடிக்கை எடுத்தோம். மாநிலங்களை நகராட்சிகளாக மாற்ற பார்க்கிறது பாஜக அரசு. மாநில கட்சிகள் ஆட்சி அமைக்கும் என்பதை இந்தியாவில் முதலில் நிகழ்த்திக் காட்டியது திமுகதான். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் அதிகாரத்தை பெற்று தந்துள்ளோம். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கு உரிமைகளை பெற்று தந்துள்ளோம். மாநில கட்சிகளே இருக்கக் கூடாது என்று பாஜக செயல்பட்டு வருகிறது; பாஜகவினால் தொட முடியாத ஒரே மாநிலம் தமிழ்நாடு; தமிழ்நாடு தலைகுனியாது என்று சொல்லும் இயக்கமாக திமுக உள்ளது. தமிழ்நாட்டுக்கும் தமிழினத்துக்கும் என்றும் இளைஞர்கள் தேவை

சுயமரியாதையை விட்டுக்கொடுத்த கட்சிகளை வீழ்த்த நீங்கள் தேவை.

திமுகவை இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு எந்த கொம்பனாலும் தொட்டுக் கூட பார்க்க முடியாது. மும்மொழிக் கொள்கைஎன்றபெயரில் இந்தியை திணிக்கும் கத்தி நம் தலை மீதுதொங்கிக்கொண்டிருக்கிறது. தமிழ் மொழியை அழித்தால் நமது அடையாளத்தை அழித்து விடலாம் என்று பாஜக நினைக்கிறது. இளைஞர்கள் கொள்கையோடு செயல்பட வேண்டும்; அதிக புத்தகங்களை படிக்க வேண்டும்; திராவிடம் தொடர்பான வீடியோக்களை பாருங்கள். இளைஞர்கள் புத்தகங்கள் வாசித்து கோர்வையுடன் எழுதிப் பழகி, சிறு சிறு கூட்டங்களில் பேச வேண்டும்

7 வது முறையாகவும் திமுகதான் ஆட்சி அமைக்கும். திமுகதான் 7வது முறையாக ஆட்சி அமைக்கும் எனப்தில் நமது எதிரிகள் உள்பட யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. பரப்புரையின் கடைசி நிமிடம் வரை மக்களை சந்தித்து வாக்கு சேகரிக்க வேண்டும். ஒன்றிய அரசின் தர வரிசையிலும் தமிழ்நாடுதான் முதலிடம். கடந்த 5 ஆண்டுகளில் திராவிட மாடல் செய்த சாதனைகளைப்போல் எந்த அரசும் செய்யவில்லை. பெண்களின் உழைப்புக்கு அங்கீகாரமாக மகளிர் உரிமைத் தொகை வழங்கி வருகிறோம்.

நான் தான் கூட்டணிக்கு தலைமை என்று புலம்பிக் கொண்டியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி; விக்ஷித் பாரத் ஜி ராம் ஜி திட்டத்தின் பெயரை எடப்பாடி பழனிசாமியால் சொல்ல முடியுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# “உலகுக்கான இந்தியாவின் கொடையே தமிழ் மொழி”

## மலேசியாவில் பிரதமர் மோடி பெருமிதம்




கோலாலம்பூர்: உலகுக்கான இந்தியாவின் கொடை தமிழ் மொழி என்றும் தமிழ் இலக்கியம் நித்தியமானது என்றும் தமிழ் பண்பாடு உலகளாவியது என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிமின் அழைப்பின் பேரில் இரண்டு நாள் அரசு முறைப்பயணமாகபிரதமர் நரேந்திர மோடி மலேசியா சென்றுள்ளார். தலைநகர் கோலாலம்பூரில் பிரதமர் மோடியை விமான நிலையத்துக்கே வந்து அன்வர் இப்ராஹிம் வரவேற்றார். இதையடுத்து, பிரதமர் மோடி பங்கேற்க இருந்த சமூக நிகழ்ச்சிக்கு அவரை தனது காரிலேயே அழைத்துச் சென்றார்.

இந்திய வம்சாவளியினர் பெருமளவில் பங்கேற்றசமூகநிகழ்ச்சியில் உரையாற்றிய அன்வர் இப்ராஹிம், "உங்கள் போராட்டத்தை நான் பின்தொடர்ந்து வருகிறேன். மோடியின் தனிப்பட்ட நண்பராக நான் இருப்பதை பாக்கியமாகக் கருதுகிறேன்" என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, வணக்கம் என்று கூறி அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து பேசிய அவர், "இந்தியாவுக்கும் மலேசியாவுக்குமான தொடர்பு இதயப்பூர்வமானது. உலகில் இந்திய வம்சாவளியினர் அதிகம் இருக்கும் இரண்டாவது நாடு மலேசியா. இந்தியாவையும் மலேசியாவையும் இணைக்கும் விஷயங்கள் பல உள்ளன. இங்குள்ள நீங்கள் இரு நாடுகளையும்இணைக்கும் உயிருள்ள பாலமாக இருக்கிறீர்கள். நம் மொழிகளில் நாம் பகிரும் பல வார்த்தைகளில் நாம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்கிறோம்.

நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களில் ஒரு பகுதியினர்மலேசியாவில் இந்திய இசை மிகவும் பிரபலம் என்று கேள்விப்பட்டேன். மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் மிகச் சிறப்பாக பாடுவார். பல இந்தியர்களுக்கு இது தெரியாது. அவரது பாடல்கள் இந்தியாவில் வைரலாகின. அவருக்கு தமிழ் இசையில் ஆழ்ந்த ஆர்வம் உள்ளது என்பதை அறிந்து நான் மிகழ்ந்தேன். மலேசியாவில் உள்ள நேதாஜி சேவை மையம் மற்றும் நேதாஜி நல அறக்கட்டளையின் முயற்சிகளுக்கு வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

பல நூற்றாண்டுகளாக நீங்கள் இந்திய மரபுகளை பாதுகாத்து வருவது உண்மையிலேயே குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் மனதின் குரல் நிகழ்ச்சியில் உங்கள் பணி குறித்து நான் பேசினேன். மலேசியாவில் 500க்கும் மேற்பட்ட பள்ளிகள் இந்திய மொழிகளில் கல்வி கற்பிக்கின்றன என்பதை கூறினேன். இந்தியாவின் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் வந்த மக்களும் அவர்களின் வழித்தோன்றல்களும் இங்கே இருக்கிறீர்கள். பண்பாட்டு ஒற்றுமை என்ற நூல் நம்மை வலுவாகப் பிணைக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற நமது புரிதலில்தான் நமது வலிமை அடங்கியுள்ளது.

தமிழ் மொழி, உலகுக்கான இந்தியாவின் கொடை. தமிழ் இலக்கியம் நித்தியமானது, தமிழ் நண்பாடு உலகளாவியது. தமிழர்கள் தங்கள் திறமைகளால் மனிதகுலத்துக்குசேவை செய்கின்றனர். நாம் ஒருவருக்கு ஒருவர் வெற்றிகளைக் கொண்டாடுகிறோம். சந்திராயன்–2 திட்டத்தின் வெற்றிக்கு பிரதமர் அன்வர் இப்ராஹிம் தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தபோது நான் மிகவும் நெகிழ்ந்து போனேன். இந்தியாவின் வெற்றி மலேசியாவின் வெற்றி. இது ஆசியாவின் வெற்றி.

இந்தியாவின் யுபிஐ விரைவில் மலேசியாவுக்கு வர இருக்கிறது என்பதை அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு வருகை தருமாறு உங்கள் அனைவரையும் அழைக்கிறேன். கடந்த சில ஆண்டுகளில் இந்தியா உள்கட்டமைப்பு மற்றும் இணைப்பு வசதிகளில் முன் எப்போதும் இல்லாத வளர்ச்சியைக் கண்டுள்ளது. வந்தே பாரத் போன்ற நவீன ரயில்கள் சர்வதேச அளவில் பாராட்டுக்களைப் பெற்று வருகின்றன. நீங்கள் பயணம் செய்து நம்ப முடியாத இந்தியாவை அனுபவிக்குமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா ஒரு பெரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. ஒரு காலத்தில் இந்தியா 11வது பெரிய பொருளாதாரமாக இருந்தது. இப்போது, முதல் மூன்று இடங்களை நோக்கி முன்னேறி வருகிறோம்.

நாம் உலகின் வேகமாக வளரும் முக்கிய பொருளாதாரமாக இருக்கிறோம். இந்தியாவில் தயாரிப்போம் என்பது அப்போதுதான் நடப்பட்ட ஒருஇளம்செடியாக இருந்தது. இப்போது, இந்தியாஉலகின்இரண்டாவது பெரிய மொபைல் போன் தயாரிப்பு நாடாக உள்ளது" என தெரிவித்தார். முன்னதாக, 800–க்கும் மேற்பட்ட நடன கலைஞர்கள் ஒன்றிணைந்து நடனமாடினர்.

# தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்

## பிப்.17ல் தாக்கல்; சபாநாயகர் அப்பாவு அறிவிப்பு



சென்னை:

தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் பிப்.17–ம் தேதி தாக்கல் செய்யப்படும் என சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. எனவே, தமிழக அரசு 2026–27 நிதி ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையைதாக்கல்செய்ய வேண்டி உள்ளது. இந்நிலையில், தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் கடந்த 5–ம் தேதி தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது. இதில் ரூ.34,327 கோடி மதிப்பிலான 15 தொழில் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இது தொடர்பாக திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் சபாநாயகர் அப்பாவு கூறியதாவது: தமிழக சட்டப்பேரவை விதி எண் 26/1–ன் கீழ் தமிழக அரசின் சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் 17–ம் தேதி காலை 9:30 மணிக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவைமண்டபத்தில் கூடுகிறது. அன்றையதினம் 2026–27 ஆம் ஆண்டுக்கான இடைக்காலநிதிநிலை அறிக்கையை நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு தாக்கல் செய்கிறார்.

தொடர்ந்து வரும் 20–ம் தேதி பேரவை விதி 193/1–ன் கீழ் 2026– 27 ஆம் ஆண்டுக்கான முன்பண மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

பேரவை விதி 189 /1–ன் கீழ் 2025– 26 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவின மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. வரும் 17–ம் தேதி அலுவல் ஆய்வுக் குழு கூடி சட்டப்பேரவை எத்தனை நாள்கள் நடைபெறும் என்பதை முடிவு செய்யும். சட்டப்பேரவை நிகழ்வுகள் இணையதளத்தில் பதிவேற்றம்செய்யப்படுகிறது. உலகெங்கிலும் இருந்து யார் வேண்டுமானாலும் இணையதளம் மூலம் அதை பார்த்துக் கொள்ள முடியும். அமைச்சரின் பதிலுரைகள், மானிய கோரிக்கைகள், சிறப்பு தீர்மானங்கள் போன்றவை நேரலை செய்யப்படுகிறது. சட்டப்பேரவை விவாதங்களை முழுமையாக நேரலை செய்வது குறித்துசட்டப்பேரவை அலுவல் ஆய்வு குழு முடிவு செய்யும்.

இவ்வாறு அப்பாவு கூறினார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தென்காசி மாவட்டம் ஆய்க்குடி பேரூராட்சி பகுதியில் புதிய பயணிகள் நிழற்குடை அமைத்துத்தர அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரனிடம் பேரூராட்சி சேர்மன் சுந்தரராஜன் கோரிக்கை மனு



தென்காசி மாவட்டம் ஆய்க்குடி பேரூராட்சி கீழ பேரூந்து நிறுத்தத்தில் புதியதாக பயணிகள் நிழற்குடை கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்க பரிந்துரை செய்யக்கோரி தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.. ஆர். ராமச்சந்திரனிடம் ஆய்க்குடி பேரூராட்சி மன்றதலைவர் க.சுந்தரராஜன் கோரிக்கை மனு ஒன்றை கொடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கை மனுவில் அவர் கூறியிருப்பதாவது,

தென்காசி மாவட்டம், ஆய்க்குடி தேர்வுநிலை பேரூராட்சி வளர்ந்து வரும் பேரூராட்சி ஆகும் ஆய்க்குடி பகுதியில் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் விவசாயம் மற்றும் கூலி வேலை செய்து வருகின்றனர் வேலைக்கு செல்லும் ஆண்கள் பெண்கள் மற்றும் பள்ளி பயிலும் குழந்தைகள் என அனைவரும் பேரூந்தில் பயணம் செய்து செல்கின்றனர்.

ஆய்க்குடி ஊரின் மையப்பகுதியானமருத்துவ மனைக்கு அருகில் உள்ள கீழ பேரூந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை இல்லை ஆய்க்குடி பேரூராட்சி பொதுநிதி திட்டத்தின் கீழ் பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணிகள் ரூ 12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது மெயின் ரோடு பகுதியில் பயணிகள் நிழற்குடை அமைக்க வழிவகை இல்லாத காரணத்தினால் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கீழ்புறம் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் மேற்கு பக்கத்தில் சுரண்டை செங்கோட்டை மெயின்ரோட்டில் 10X6மீ என்ற அளவில் இடத்தினை ஒதுக்கீடு செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்

தற்போது ஆய்க்குடி கீழபேரூந்துநிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை ஏதும் இல்லாத காரணத்தினால் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்கள் அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் கர்ப்பிணிகள் முதியோர்கள் மற்றும் வேலைகளுக்கு செல்வோர் பேரூந்துக்காக காத்திருக்கும் போது வெயில் மற்றும் மழை நேரங்களில் மிகவும் சிரமப்பட்டுகிறன்றனர்

மேலும் மேற்படி பகுதியில் ஏற்கெனவே இருந்தபயணிகள் நிழற்குடை சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற சாலை விரிவாக்க பணியின் போது இடையூறாக இருந்ததால் இடிக்கப்பட்டு விட்டது. நாளது தேதி வரையிலும் பயணிகள் நிழற்குடை கட்டுவதற்கு அனுமதி கிடைக்கப்பெறாத காரணத்தினால் கட்டப்படாமல் உள்ளது. ஆய்க்குடி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு தினசரி சுமார் 600 மாணவ மாணவியர்கள் வந்து செல்கின்றனர் மேலும் ஆய்க்குடி அரசு மருத்துவமனைக்கு சுற்று வட்டார கிராமங்களில் இருந்து தினசரி வெளிநோயாளிகளாக சுமார் 1000க்கும் மேற்பட்ட நோயாளிகள் வந்து செல்கின்றனர். பயணிகள் நிழற்குடை இல்லாத காரணத்தினால்நோயாளிகள் வெயில் மற்றும் மழைக்காலங்களில் பேரூந்துக்காக காத்து நிற்பதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால் ஆளும் திமுக ஆட்சிக்கு மிகவும் கெட்டப்பெயர் ஏற்படும் சூழ்நிலை இருந்து வருகிறது

எனவே பொதுமக்களின் நலன் கருதி ஆய்க்குடி கீழபேரூந்து நிறுத்தத்தில் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான இடத்தில் 10-5மீ என்ற அளவில் பயணிகள் நிழற்குடை கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்கிட கேட்டு தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், செயற்பொறியாளர் பொதுப்பணித்துறைக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதில் நாளது வரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே தாங்கள் பொதுமக்களின் அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டும் பொதுமக்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகளின் நலன் கருதியும் விரைந்து பணிகள் மேற்கொள்வதற்குவசதியாகவிரைந்து தடையின்மை சான்று வழங்குவதற்கு பரிந்துரை செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஆய்க்குடி பேரூராட்சி மன்றத்தலைவர் க.சுந்தரராஜன்அந்தகோரிக்கை மனுவில்ல் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தை மாத கடைசி வெள்ளிக்கிழமையை முன்னிட்டு

# பிரசித்தி பெற்ற இரணியம்மன் ஆலயத்தில் திருவிளக்கு பூஜை நடந்தது

தைமாதகடைசிவெள்ளிக்கிழமையை முன்



னிட்டு வண்டலூர் பிரசித்தி பெற்ற இரணி அம்மன் கோவிலில் திருவிழாக்குபூஜைவெகு விமர்சையாக நடைபெற்றது. அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இரணியம்மன் ஆலயத்தில் சுற்றுவ ட்டார 500க்கும் மேற்பட்ட பெண்கள் திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்டனர்.

இரணி அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரங்களுடன் பூஜை நடைபெற்றது குறிப்பாக ஜிஎஸ்டி சாலையை கடந்துசெல்லும்பெரும்பாலான வாகனங்கள் இந்த ஆலயத்தில் பூஜை செய்து புறப்படுவது வழக்கம்புதிய வாகனங்கள் வாங்குபவர்களும் இங்கு பூஜை செய்து தங்கள் வாகனத்தை சாலைகளில் ஓட்ட துவங்குவர்

தைமாதகடைசிவெள்ளிக்கிழமை அன்று திருவிளக்கு பூஜை மேற்கொள்வதன் மூலம் மாங்கல்ய பாக்கியமும் அனைத்து வளமும் பெற்று வாழ்வதற்காக வீட்டில் இருந்து கொண்டு வந்திருந்த விளக்கின் முன்பு அமர்ந்த பெண்கள் விளக்கிற்கு குங்கும அர்ச்சனை செய்தும் மந்திரங்கள் முழங்கியும் வழிபாடு மேற்கொண்டனர்..



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.02.2026) ஈரோடு மாவட்டம்,நம்பியூர்வட்டம்,சாவக்காட்டுபாளையம்பகுதியில் "உங்ககனவசொல்லுங்க" விண்ணப்பபடிவம் வழங்குவதை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



## பாவூர்சத்திரத்தில்

# ரூ.5.78 கோடியில் கீழப்பாவூர் யூனியன் அலுவலக கட்டிடம் காணொலி காட்சியில் முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

பாவூர்சத்திரத்தில் ரூ.5.78 கோடியில் கட்டப்பட்ட கீழப்பாவூர் யூனியன்அலுவலகபுதிய கட்டிடத்தினை காணொலி காட்சி மூலமாக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரத்தில் ஊரக வளர்ச்சிமற்றும்ஊராட்சித் துறை சார்பில் ரூ.5.78 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டிட திறப்பு விழா நேற்று நடைபெற்றது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் கட்டிடத்தை திறந்து வைத்து பேசினார்.

இதையொட்டி பாவூர்சத்திரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் யூனியன் சேர்மன் காவேரி சீனித்துரை தலைமை வகித்து, அலுவலகத்தை திறந்து வைத்து குத்துவி ளக்கேற்றி வைத்தார்.துணை சேர்மன் முத்துகுமார், ஆணையாளர் விஜயகணபதி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ராதாதிருமலை முன்னிலைவகித்தார். இந்நிகழ்ச்சியில் தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக பார்வையாளர்டாக்டர்கலைகதிரவன்,கீழப்பாவூர்மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் சீனித்துரை,மாவட்ட கவுன்சிலர்கள் பேராசிரியர் சாக்ரடீஸ், சுப்பிரமணியன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் இராம.உதயசூரியன், வளன்ராஜா, நாகராஜன், ஜான்சி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி, ஹேமா, சுரேஷ்லிகோரி, சரவணன், புவனா, கனகஜோதி, அருமைகண்ணன், ராதாகுமாரி, மரியசெல்வமேரி. பகவதி, மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள்,யூனியன் அலுவலக பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டம் கடையநல்லூர்

# விஸ்டம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பெருந்திரள் வாசிப்பு நிகழ்ச்சி

தென்காசி மாவட்டத்தில் நடைபெற்று வரும் நான்காவது பொதிகை



புத்தகத்திருவிழாவை முன்னிட்டு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஏற்பாடு செய்த பெருந்திரள் வாசிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ் வாசிப்பிற்கு பள்ளித்தாளாளர் சேக் உதுமான் தலைமை தாங்கினார்.

தாளாளர் ஜெய்லானி முன்னிலை வகித்தார்.

தலைமை ஆசிரியர் உமா மகேஸ் வரி வரவேற்றார். தாமிர பரணி கலைக்குழு மதியழகன் அறிவியல் பாடல் பாடினார்,

வாசிப்பின் அவசியம் குறித்தும் , வாசிப்பதனால் ஆன பயன் குறித்தும் சமூக செயல்பாட்டாளர் மஹ்முதா சையத் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலரும் இலஞ்சி ஆர்.பி. பள்ளி ஆசிரியருமான சுரேஷ் குமார் மற்றும் ஊர்வன பாதுகாவலர் சேக் உசேன் ஆகியோர் இணைந்து துவக்கி வைத்தார்கள். மாணவர்கள் ஐநூரு பேர் எழுத்தாளர் ஆயிஷா நடராஜன் எழுதிய எங்கள் தேசம் என்ற புத்தகத்தினை ஒன்று கூடி திரளாக வாசித்தனர். பள்ளி இளம் எழுத்தாளர் ஹேனா பாராட்டப்பட்டார்.


நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் த கலந்து கொண்டனர். அனைத்து மாணவர்களையும் புத்தக திருவிழாவிற்கு வருகைதருமாறு வேண்டுகோள் விடப்பட்டது. பள்ளி துணை முதல்வர் ரசூல் பீவி ஒருங்கிணைத்து அனைத்து ஏற்பாடுகளும் செய்திருந்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் முனைவர் பால் மகேஷ் நன்றி கூறினார்.





திருப்பூர்மாவட்டம்தாராபுரம்தாலுகாகொளிஞ்சிவாடி பகுதியில் அமராவதி ஆற்று பாலம் தெற்கு வடக்கிலும் தொடர்ந்து மணல்திருட்டு நடைபெற்று வருகிறது மணல் திருடர்கள் ஆற்றுக்குள் குளிப்பது போல் நடித்து சாக்குப் பையில் மணலை நிரப்புகிறார்கள் அதை மூட்டையாக கட்டி ஆற்றில் கரையோரத்தில் நூற்றுக்கணக்கான மூட்டைகளை அடுக்கி வைக்கிறார்கள் அதை இரவு நேரங்களில் யாருக்கும் தெரியாமல் டூவீலர் மூலம் வினியோகம் செய்கிறார்கள் இவர்களுக்கு வேறு எந்த வேலையும் கிடையாது ஆற்று மணலை திருடி விற்பனை செய்வதே இவர்களின் தொழிலாகும் ஒரு மூட்டை சாக்கு மணல்ரூபாய் 200 முதல் 300 வரை விற்பனை செய்கிறார்கள் ஆற்று மணலை திருடி டூவீலர் மூலம் விற்பனை செய்கிறார்கள் இதை கிராம அலுவலர் மற்றும் வட்டாட்சியரிடம் பலமுறை பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் தெரிவித்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை இதை தடுக்க கடுமையானசட்டம்கொண்டுவரவேண்டும்இது முதல்ல ஆற்று மணலை திருடி நமது இயற்கை வளங்களை நாசப்படுத்துகிறார்கள் இதனால் அப்பாவை 12 வயது சிறுமி சென்ற வருடம் உயிரிழந்துள்ளார் ஆகவே இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை .

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 82 கனஅடியாக சரிவு



மேட்டூர் / தருமபுரி: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 82 கனஅடியாக சரிந்துள்ளது.காவிரி நீர்ப் பிடிப்புப்பகுதிகளில்மழைதணிந்துள்ளதால்மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

அணைக்கு நேற்று முன் தி னம் விநாடிக்கு 220 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று விநாடிக்கு 82 கனஅ டி யாக ச ரிந் துள் ளது. அணையில் இருந்து குடி நீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 92.12அடியிலிருந்து 91.96அடியாகவும்,நீர் இருப்பு 55.10 டிஎம்சியிலிருந்து 54.91 டிஎம்சியாகவும் குறைந்துள் ளது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் கடந்த 4-ம் தேதி காலை 6 மணி அளவீட்டின்போது நீர்வரத்து விநாடிக்கு 2,000 கனஅடியாகப் பதிவானது. 5-ம் தேதி காலையில் விநாடிக்கு 1,500 கனஅடியாகக் குறைந்தது. நேற்று காலை அ ள வீட்டி ன்போது நீர் வரத்து மேலும் சரிவடைந்து விநாடிக்கு 1,200 கனஅடியாக பதிவானது.

# இனி பேருந்துக்கு வீதியில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை

# சாயர்புரத்தில் திறந்தாச்சு புதிய பேருந்து நிலையம்

தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரத்தில் ரூ.1.67 கோடியில் புதிய பேருந்து நிலையம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.



சாயர்புரத்தில்ரூ.1.67 கோடியில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கு பேரூராட்சி தலைவர் அ.பாக்கியலெட்சுமி தலைமை வகித்து குத்து விளக்கு ஏற்றி வைத்தார்.

திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கிறிஸ்டோபர் தாஸ், தூத்துக்குடி மாவட்ட உதவி செயற்பொறியாளர் ஹரிகரன், சாயர்புரம் பேரூராட்சிசெயல் அலுவலர் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் திருவைகுண்டம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் பி.ஜி.ரவி, தெற்கு மாவட்ட தி.மு.க துணை செயலாளர் ஜெபதங்கம் பிரேமா, சாயர்புரம் நகர தி.மு.க செயலாளர் கண்ணன், பெருங்குளம் நவநீத முத்துக்குமார், சாயர்புரம் முன்னாள் கூட்டுறவு வங்கி தலைவர் த. அறவாழி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராமமூர்த்தி,பொருளாளர் பத்திரகாளிமுத்து, ஒப்பந்ததாரர் ஜெ.பிரேம் இம்மானுவேல், தெற்கு மாவட்ட முன்னாள் காங்.தலைவரும் பேரூராட்சி கவுன்சிலருமான எஸ்.வி.பி.எஸ். பொ.ஜெயக்குமார், வட்டாரத் தலைவர்கள் ஜெயசீலன் துரை, சொரிமுத்து பிரதாபன், பேரூராட்சி துணை தலைவர் பிரியாமேரி,கவுன்சிலர்கள் கிறிஸ்டோபர், இந்திரா, பிரவீனா, பிளாட்டினா மேரி, முத்துமாரி, அமுதா, சுமதி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் திமுக செயற்குழு கூட்டம்

## தி.மு.க. மத்திய ஒன்றிய செயலாளர் டி.வி.கோகுலகண்ணன் தலைமையில் நடைபெற்றது



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் திமுக செயற்குழு கூட்டம் அச்சிறுப்பாக்கம் எலப்பாக்கம் சாலையில் உள்ள மத்திய ஒன்றிய தலைமை அலுவலகத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், ஆகியோரின் ஆணைக்கிணங்க காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்றஉறுப்பினருமான கா.சுந்தர், காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் ஜி.செல்வம் ஆகியோரின் ஆலோசனைப்படி அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி.வி.கோகுலக்கண்ணன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. முன்னதாக கூட்டத்தில் பேசிய மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி.வி.கோகுலக்கண்ணன் அச்சிறுப்பா க்கம் மத்திய ஒன்றிய த்திறல் செயல்வீரர்களாக செயல்பட பொறுப்பாளர்களை நியமிக்கப்பட்டதற்கு கழக தலைவர் மற்றும் செயலாளர் மாவட்ட கழக செயலாளர் நன்றி தெரிவித்தார்.

மார்ச் 1ம் தேதி பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் இரு வண்ணக் கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்க வேண்டும். பிப்ரவரி 11ம் தேதி மகாபலிபுரம் திருவிடந்தியில் நடைபெற இருக்கும் வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி மாநாடு கலந்து கொள்ள ஆலோசனைக் வழங்கினார் மகளிர் அணி சார்பாக வெல்லும் தமிழ் பெண்கள் மாநாட்டு ஆலோசனைக் கூட்டம் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற கழக அரசின் மகளிர் நல திட்டங்களை சாதனைகளை வீடு தோறும் கொண்டு சென்று பரப்புரை செய்ய ஒவ்வொரு வாக்கு சாவடிக்கும்

பத்து மகளிர் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை கூட்டத்தில் எடுத்துக் கூறி முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினார். இந்நிகழ்வில் ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள் எஸ்.எம்.ஜியாவுதீன் ஜெ.பார்த்தசாரதி து.கருணாகரன் முகமதுகனி எம்.சீனிவாசன் வெங்கடேசன் ரா.ஏசிரகு இந்துமதி ராஜகோபால் மற்றும் அணியின் அமைப்பாளர்கள் கலியுக கண்ணதாசன் தரு. லட்சுமணன் பிரபாகரன் செந்தில்குமார் எஸ்.சுதாகர் துரைகணேஷ் பத்மநாபன் ஜானகிராமன் யுவன்சங்கர் பி.ராஜி சதீஷ் சிலம்பரசன் சுதாமன் வி.கிருஷ்ணா சம்பத் சீனு உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.02.2026) ஈரோடு மாவட்டம், நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், எம்மாம்பூண்டி ஊராட்சி, சாவக்காட்டுபாளையம் நூலகத்தினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் (07.02.2026) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் புத்தகம் வழங்கி வரவேற்றார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் சாத்தமங்கலத்தில் உள்ள மணி மண்டபத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ.தளபதி அவர்கள்,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பூமிநாதன் அவர்கள், மாநகராட்சி துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்

# ஈரோடு மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் புதியதாக நூலகம் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு பொருட்கள் அடங்கிய அறை திறப்புவிழா



ஈரோடு மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் உள்ள காவலர் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் காவலர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகளுக்கு கல்வி முன்னேற்றத்திற்காகவும், அரசு வேலை வாய்ப்பு ஏற்படுத்தவும் மற்றும் பொது அறிவை மேம்படுத்தவும், காவல் ஆளினர்களின் பராமரிப்பில் உள்ள பெற்றோர்களின் நேரங்களை பயனுள்ளதாக மாற்றவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் புதிதாக பொது நூலகமும் மற்றும் சிறு குழந்தைகள் மாலை வேளைகளில் மற்றும் விடுமுறை நாட்களில் விளையாடுவதற்காக சதுரங்கம், கேரம்போர்டு உள்ளிட்ட விளையாட்டு சாதனங்கள் அடங்கிய தனி அறையும், நேற்று 07.02.2026ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா திறந்து வைத்தார் .மேற்படி நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், காவல் துணை கண்காணிப்பாளர்,ஆயுதப்படை, காவல் ஆய்வாளர்கள் ஆயுதப்படை மற்றும் மோட்டார் வாகனப்பிரிவு,காவல் ஆளினர்கள், ஆளினர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டனர்.

# கோவை பாப்பநாயக்கன் புதூரில் கோரிக்கை விளக்க தெருமுனை கூட்டம் நடைபெற்றது



அனைத்து தொழிற்சங்க அமைப்புகள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் ஒன்றிய பாஜக அரசின் தொழிலா ளர் மற்றும் விவசாயிகள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக, வரும் 12ம் தேதி அகில இந்திய பொது வேலை நிறுத்தம்,மறியல் நடைபெற உள்ளது.

இது குறித்து கோரிக்கை விளக்க தெருமுனைக்கூட்டம் பாப்பநாயக்கன் புதூர் பேருந்து நிறுத்தம் பகுதியில் நடைபெற்றது.

கூட்டத்திற்குஏஐடியுசிஅமைப்புசாராதொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் என். சந்திரன் தலைமை தாங்கினார்.இதில் எல்.பி.எப்,சி.டி.சி துரை, ஏஐடியுசி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம்,சிவசாமி ஐ.என்.டி.யூ.சி. ரங்கநாதன்,

சந்தோஷ் ,யூடியூசி

கனகராஜ் , மாமன்ற உறுப்பினர் சாந்திசந்திரன், ஹெச். எம். எஸ். மோகன்ராஜ் ஏஐடியுசி சிவா ஆகிய தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.மேலும்திமுகபா.நா.புதூர்பகுதி செயலாளர் பரணி பாக்யராஜ் மற்றும் அவைத்தலைவர் சிவா, வட்ட கிளை செயலாளர்கள் தம்பி சண்முகம், நித்யானந்தம், சுரேஷ்,ஹரி,பாலு,தம்பு,தங்கவேல், வள்ளி சிபிஐ சார்பில் அசரப்அலி, மகாலிங்கம், அப்துல்சமது, அன்பரசன்,முரளி சிபிஎம் சார்பில் காசிவிஸ்வநாதன்,

காங்கிரஸ் சார்பில் கணேசன், கார்த்தி, சண்முக சுந்தரம் மதிமுக சார்பில் ,பாபு (எ) சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் சிஐடியு கோபால் அவர்கள் நன்றியுரை கூறினார்.

# திருப்பத்தூர் கிறிஸ்துராஜா பள்ளியில் அறிவியல் துளிர் இல்லங்கள் துவக்க விழா



தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோளாகிய மாணவர்களிடத்தில் அறிவியல் மனப்பான்மையைவளர்க்கும்நோக்கத்தில்திருப்பத்தூர் கிறிஸ்துராஜா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் துளிர் இல்லங்கள் துவக்கப் பட்டன. அப்துல் கலாம் அறிவியல் துளிர் இல்லத்தின் தலைவராக எட்டாம் வகுப்பு மாணவர் முகேஷ் செயலாளராகஏழாம் வகுப்பு மாணவர் பரணீத் மற்றும் பொருளாளராக ஆறாம் வகுப்பு மாணவர் யாஷ்வந்த் ஆகியோர் பதவியில் அமர்த்தப்பட்டனர். ஐன்ஸ்டீன் அறிவியல் துளிர் இல்லத் தலைவராக எட்டாம் வகுப்பு மாணவர் கார்த்திகாஶ்ரீ செயலாளராக ஏழாம் வகுப்பு மாணவர் பெர்னிஸ் ஜூனியா மற்றும் பொருளாளராக ஆறாம் வகுப்பு மாணவர் மொகிதாஶ்ரீ ஆகியோர் பதவியில் அமர்த்தப் பட்டனர்.

முன்னதாக ஐன்ஸ்டீன் அறிவியல் இல்லத் தலைவர் கார்த்திகாஶ்ரீ அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பள்ளித் தலைவர் விக்டர் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல்இயக்கத்தின்வழிகாட்டுதலின்படிஅறிவியல் துளிர் இல்லங்கள் துவங்கப்படுவதன் காரணங்களை விளக்கிஅறிமுகஉரையாற்றினார்.தமிழ்நாடுஅறிவியல் இயக்கசிவகங்கைமாவட்டத்தலைவர் ஆரோக்கியசாமி தனது தலைமை உரையில் மாணவப் பருவத்தில் இருந்தே மாணவர்கள் எந்த ஒரு நிகழ்வையும் செயலையும் அறிவியல் மனப்பான்மையுடன் சிந்தித்து செயல்படும் அறிவியல் பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார். மாவட்டச் செயலாளர் பிரபு அறிவியல் துளிர் இல்லப் பொறுப்பாளர்களாகிய தலைவர் செயலாளர் பொருளாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் பற்றி எடுத்துரைத்து அவர்களைப் பதவியில் அமர்த்தினார். மாவட்டப் பொருளாளர் சாஸ்தா சுந்தரம் முன்னாள் மாநிலப் பொருளாளர் ஜீவானந்தம் மற்றும் முன்னாள் கிளைச் செயலாளர் சேகர் ஆகியோர் எந்த ஒரு செயலிலும் அறிவியல் அணுகுமுறை இருக்க வேண்டும் என்று எடுத்துரைத்து அறிவியல் எழுச்சியுரையாற்றினர். அப்துல் கலாம் துளிர் இல்லத் தலைவர் முகேஷ் நன்றி கூறினார். மாணவ மாணவிகள் திரளாக கலந்துகொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# ஈரோடு மாநகராட்சி சார்பில் நடைபெறும் முதலாம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார்



ஈரோடு மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொள்ளும் முதலாம் ஆண்டு விளையாட்டு போட்டிகள் 04.2.2026, 05.2.2026 மற்றும் 07.02.2026 ஆகிய 3 நாட்கள் நடைபெற்றது. இதில் 04.02.2026 மற்றும் 05.02.2026 ஆகிய நாட்களில் கிரிக்கெட் மற்றும் இறகு பந்து போட்டிகள் நடைபெற்றன. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஈரோடு மாநகராட்சி சார்பில் நடைபெற்று வரும் விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார். இவ்விளையாட்டுப்போட்டிகளில் 100 மீட்டர். 200 மீட்டர். 400 மீட்டர் ஓட்ட பந்தயம், நீளம் தாண்டுதல். குண்டுஎறிதல், கால்பந்தாட்டம், கைப்பந்தாட்டம்,கேரம்,சதுரங்கம், கபடி விளையாட்டு ஆகிய விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இப் போட்டிகளில் நடுவர்களாக செயல்பட பள்ளிக்கல்வித்துறை மூலம் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் ஆணையாளர் முதல் தூய்மை பணியாளர்கள் வரை அனைவரும் கலந்து கொண்டனர். மேலும் இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளது. ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின்,உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி , துணை மேயர் வே. செல்வராஜ், துணை ஆணையர் தனலட்சுமி, மாவட்ட விளையாட்டு அலுவலர் சதீஷ்குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.02.2026) ஈரோடு மாவட்டம், நம்பியூர்,சாவக்காட்டுபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு திட்ட மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு கண் பரிசோதனை செய்வதை பார்வையிட்டார். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. அருணா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (07.02.2026) ஈரோடு மாவட்டம், நம்பியூர்,சாவக்காட்டு பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு காசநோய் பெட்டகத்தினை வழங்கினார். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா உட்பட பலர் உள்ளனர்.

# அருந்ததியர் உள் இட ஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்த வேண்டும்: திமுக தேர்தல் அறிக்கை குழுவிடம் வடிவேல் ராமன் கோரிக்கை

தமிழ்நாட்டில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் கருத்து கேட்பு கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. குழுவின் தலைவர் கனிமொழி எம்.பி., தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கோவை செழியன், டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட குழுவினர் பல்வேறு சமூக அமைப்புகளின் தலைவர்களிடம் கோரிக்கைகளைக்கேட்டறிந்தனர். இதில் சமூக நீதி மக்கள் கட்சி மற்றும் மாவீரன் பொல்லான் பேரவை சார்பில் வடிவேல் ராமன் நேரில் கலந்துகொண்டு 12 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தார்.

அந்த மனுவில், அருந்ததியர் சமூகத்திற்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் தற்போதுள்ள 3 சதவீத உள் இட ஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்த வேண்டும், தனியார் கல்லூரிகளில் பயிலும் பட்டியலின மாணவர்களின் கல்வி கட்டணத்தை தமிழக அரசே ஏற்க வேண்டும், ஆதிதிராவிடர் நலத்துறையின் பெயரை சமூக நீதித்துறை அல்லது பட்டியலின நலத்துறை என மாற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மேலும், கோவை, திருப்பூர் உள்ளிட்ட மேற்கு மாவட்டங்களில் அம்பேத்கர் சிலை அமைத்தல், முன்னோடித் தலைவர் குருசாமி, மதுரை வீரன், தளபதி தில்லான் ஆகியோருக்கு மணிமண்டபம் கட்டுதல், மாவீரன் பொல்லான் மறைந்த நல்லமங்காபாளையத்தில் நினைவுச் சின்னம் அமைத்தல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தினார்.



விவசாயிகளைப் போலவே பட்டியலின மக்களுக்கும் மாவட்டந்தோறும் சிறப்பு குறைதீர்க்கும் முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் நிலமெடுப்பு செய்து வீட்டுமனை பட்டா வழங்கும் விதிகளில் திருத்தம் செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி மாவீரன் பொல்லான் மணிமண்டபம் அமைத்தமைக்காக கனிமொழிக்கு நன்றி தெரிவித்து, பொல்லான் திருவுருவப் படத்தை வடிவேல் ராமன் பரிசாக வழங்கினார். இந்நிகழ்வில் பொதுச் செயலாளர் சண்முகம், துணை பொதுச் செயலாளர் சசிகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# ரெப்கோ நுண்கடன் வங்கியின் துடியலூர் கிளையின் புதிய வளாக திறப்பு விழா விமர்சையாக நடைபெற்றது

## மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.50 லட்சம் நுண்கடன்

ரெப்கோ நுண்கடன் நிறுவனம் துடியலூர் கிளை புதிய வளாக திறப்பு விழா மேட்டுப்பளையம் சாலை வடமதுரை பகுதியில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் ரெப்கோ வீட்டு வசதி கடன் நிறுவன இயக்குனர் மற்றும் ரெப்கோ வங்கி தலைவர் சந்தானம் மற்றும் ரெப்கோ வீட்டு வசதி கடன் நிறுவன தலைவரும், ரெப்கோ நுண்கடன் நிறுவனத்தின் இயக்குநருமாகிய தங்கராஜு ஆகியோர் ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கு ஏற்றி வைத்தும், பெயர் பலகையை திறந்து வைத்தும் மகளிர் சுய உதவிக் குழு மகளிர்க்கு 50 லட்சம் ரூபாய் நுண்கடன்களை வழங்கினர்.

கோவை துடியலூரில் கடந்த 2016ம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் ரெப்கோ நுண்கடன் நிறுவன துடியலூர் கிளை தற்போது கோவை மேட்டுப்பளையம் சாலை வடமதுரை பகுதியில் புதிய வளாகத்தில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா நிகழ்வில் ரெப்கோ வீட்டு வசதி கடன் நிறுவன இயக்குனர் மற்றும் ரெப்கோ வங்கி தலைவர் சந்தானம் மற்றும் ரெப்கோ வீட்டு வசதி கடன் நிறுவன தலைவரும், ரெப்கோ நுண்கடன் நிறுவனத்தின் இயக்குநருமாகிய தங்கராஜு ஆகியோர் ரிப்பன் வெட்டி கிளையை திறந்து வைத்தனர். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்தும், பெயர்பலகையை திறந்தும் வைத்தனர்.

நிகழ்ச்சியில் ரெப்கோ நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் பாலமுருகன் திறப்பு விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். ரெப்கோ வங்கி மற்றும் ரெப்கோ நுண்கடன் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வெங்கடாசலம் மற்றும் ரெப்கோ நுண்கடன் நிறுவனத்தின் இயக்குநர் இன்னாசி ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களான ரெப்கோ வீட்டு வசதி கடன் நிறுவன இயக்குனர் மற்றும் ரெப்கோ வங்கி தலைவர் சந்தானம் மற்றும் ரெப்கோ வீட்டு வசதி கடன் நிறுவன தலைவரும், ரெப்கோ நுண்கடன் நிறுவனத்தின் இயக்குநருமாகிய தங்கராஜு



ஆகியோர் பேசும்போது

ரெப்கோ நுண்கடன் நிறுவனத்தில் கடன் பெறும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வங்கிப் பரிவர்த்தனைகள் மற்றும் நுண்கடன் பற்றிய பயிற்சி முகாமானது பெண்களுக்கு நிதி மேலாண்மை குறித்து சிறந்த புரிதலை வழங்கி அவர்களை மேலும் தன்னம்பிக்கை உள்ளவர்களாக மாற்ற உதவுவதாகவும், வேறு எந்த நிதி நிறுவனத்திலும் இல்லாத வகையில் பயிற்சியின் போது மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தைப் பற்றியும் எடுத்துரைத்தனர்.

தொடர்ந்து துடியலூர் கிளையில் நுண்கடன் விண்ணப்பித்த மகளிர் சுய உதவிக் குழு மகளிர்க்கு ரூபாய் 50 லட்சம் மதிப்பிலான நுண்கடன்களுக்கான ஆணைகளை சிறப்பு விருந்தினர்கள் வழங்கினர். மேலும் கோவை, நீலகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த கிளை மேலாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கி கவுரவித்தனர்.

இந்நிகழ்சிக்கான ஏற்பாடுகளை உதவி பொது மேலாளர் சீனிவாசன் மற்றும் துணை பொது மேலாளர் விமல் ஆகியோருடன் இணைந்து மண்டல மேலாளர் ஈஸ்வரன் கோட்ட மேலாளர்கள் முத்து குமார், சுரேஷ்குமார், முதன்மை மேலாளர் பழனி ஆறுமுகம், துணை மேலாளர்கள் நரேஷ் மற்றும் ஜீவானந்தம் ஆகியோர் செய்திருந்தனர். விழா இறுதியில் கிளை மேலாளர் சக்திவேல் நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ரெப்கோ வங்கி பணியாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், மகளிர் குழுவினர் மற்றும் அரசியல் பிரமுகர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக இத்திறப்புவிழாவிற்கு வந்திருந்த சிறப்பு விருந்தினர்களுக்கு துடியலூர் கிளை சார்பில் பேண்டு வாத்தியம் முழங்க இருபுறமும் மகளிர் சுய உதவிக்குழுவினர் கைகளில் மலர்கள் ஏந்தியும், சால்வை மற்றும் மாலை அணிவித்து பூரண கும்ப மரியாதை வழங்கினர். மேலும் ஆரத்தி எடுத்தும் சிறப்பான வரவேற்பு வழங்கினர்.

## கோவை வ.உ.சி. பூங்கா பகுதியில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில்,

# ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கல்லூரி சார்பாக நடைபெற்ற விளையாட்டு விழா

### கோவை மாவட்ட காவல்துறை துணைஆணையர் திவ்யா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்தார்




ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் 35ஆவது விளையாட்டு விழா கோவை, நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது. கோவை மாவட்ட காவல்துறை துணைஆணையர் திவ்யா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, தேசிய கோடியேற்றி வைத்து துவக்கி போட்டிகளை துவக்கி வைத்தார். எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாகஅறங்காவலர் முனைவர் சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். இந்த விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் கி. சித்ரா மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். மாநில அளவிலும் தேசிய அளவிலும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகள், விளையாட்டுவிழாவின் அடையாளமான ஒலிம்பிக் தீபத்தை ஏந்திச் சென்றனர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திவ்யா தனது உறையில் கூறியதாவது.. பெண்கள் உடல் நலமும் மன்றலமும் உடையவர்களாக இருந்தால்தான் எதிர்காலத்தைத் துணிவோடும் தெளிவோடும் எதிர்கொள்ள முடியும். அதனால் கல்லூரி மாணவிகள் கல்வியோடு உடல் நலத்தைப் பாதுகாப்பதிலும் தீவிர கவனம் செலுத்த வேண்டும். குறிக்கோளை நிர்ணயித்தல், திட்டமிடல், மன ஒருமைப்பாட்டோடு தொடர்ந்து முயற்சி செய்தல், சீராக வாழ்வை வாழ்தல் போன்ற வாழ்வியல் திறமைகளை விளையாட்டின் மூலம் கற்றுக்கொள்ளலாம் என்றார். தொடர்ந்து பல்வேறு விளையாட்டுகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கும் பேராசிரியர்களுக்கும் அலுவலகப்பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. பெண்கள் தற்காப்புக் கலைகளிலும் மனவளம் பேணுவதிலும் வல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் கராத்தே சிலம்பம், ஏரோபிக்ஸ் மற்றும் யோகா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விளையாட்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு கண்டு துறை தட்டிச் சென்றது. ிஎழா இனிதே நிறைவு பெற்றது என்பது குறிப்பிடத்த க்கது.

# கோவையில் 17 நிஜ ஹீரோக்களுக்கு அலெர்ட் பீயிங் விருதுகள் வழங்கும் விழா

நாடு முழுவதும் பல்வேறு சேவைகள் மூலம் நிஜ ஹீரோக்களாக திகழும் 17 பேருக்கு கோவையில் அலெர்ட் அமைப்பின் சார்பில் விருதுகள் வழங்கப்பட்டு பெருமை படுத்தப்பட்டது

நாடு முழுவதிலும் இடர்பாடுகளின் போது பொது மக்களை காப்பாற்றுதல், சேவை மனப்பான்மையுடன் செயல்படுதல், பிறருக்கு உதவுதல் உள்ளிட்ட சமூகம் சார்ந்த பணிகளை மேற்கொள்ளும் தனி நபர்கள் மற்றும் அமைப்புகளை கவுரவிக்கும் விதமாக அலெர்ட் அமைப்பு சார்பில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது, அந்த வகையில் இந்த அமைப்பின்9வது'அலெர்ட் பீயிங்' விருதுகள் வழங்கும் விழா கோவை, பிஎஸ்ஜி மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. இதில், சத்யார்த்தி அமைப்பின் இயக்கத்தின் நிறுவனரும், நோபல் பரிசு பெற்றவருமான கைலாஷ் சத்யார்த்திக்கு வாழ்நாள் சாதனையாளர்விருதுவழங்கப்பட்டது.

மேலும், கோவையை விபத்தில்லா நகரமாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள 'உயிர்' அமைப்பு, பெண்கள்மற்றும்குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைக்கு எதிராகப் போராடும், பிரஜ்வலா அமைப்பின் இணை நிறுவனர் சுனிதா கிருஷ்ணனுக்கும், தொழில் வளர்ச்சியை ஊக்குவித்ததற்காக கே.பி.ஆர் குழுமத்தின் தலைவர் ராமசாமிக்கும் விருதுகள் வழங்கப்பட்டது.

மேலும், தன்னை விட மூத்த மாணவன் கிணற்றில் விழுந்து உயிருக்கு போராடுகையில், அவரை காப்பாற்றிய கோவை கண்ணம்பாளையம் அரசுப் பள்ளி




9ம் வகுப்பு மாணவன் மணீஷ்க்கும், ஜான்சி ரயில் நிலையத்தில் கர்ப்பிணிக்கு உதவிய ராணுவ மேஜர் ரோஹித்திற்கும் விருதுகள் வழங்கப்பட்டது. இந்த விருதுகளை கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார், சமூக ஆர்வலர்கள் மற்றும் தொழிலதிபர்கள் வழங்கினர் இந்த நிகழ்ச்சியில் அலர்ட் அமைப்பின் தலைவர் மைக் முரளிதரன், நிறுவன அறங்காவலர் கலா பாலசுந்தரம், அலர்ட் அமைப்பின் இணை நிறுவனரும் நிர்வாக அறங்காவலருமான ராஜேஷ் திரிவேதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு மாவட்டத்தில் இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு பயிலரங்கம் 10 ந் தேதி நடைபெறுகிறது; கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



பாதுகாப்பான இணைய பயன்பாடு மற்றும் இணைய குற்ற ங்களைத் தடுக்கும் நோக்கில், Information Security Education and Awareness (ISEA) திட்டத்தின் கீழ், "பாதுகாப்பான இணைய தினம் 2026" (Safe Internet Day 2026) 6, மாவட்ட ஆட்சியரகத்தில் இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு பயிலரங்கம் நடைபெற உள்ளது. இவ்விழிப்புணர்வு பயிலரங்கம் கீழ்க்கண்ட விவரங்களின்படி நடைபெறுகிறது. இவ்விழிப்புணர்வு பயிலரங்கம் 10.02.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணிக்கு, பழைய கட்டிடத்தில் அமைந்துள்ள 4-வது மாடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சாந்த குமார் அவர்கள் சிறப்புரை ஆற்றவுள்ளனர். மேலும்,ஈரோடுமாவட்ட கூடுதல்காவல் கண்காணிப்பாளர் (சைபர் குற்றப் பிரிவு) சி.வேலுமணி, அவர்கள் சிறப்புரையாற்றி இணைய குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வை வழங்கவுள்ளனர். மேலும், புதிய இணைய அச்சுறுத்தல்கள், அலுவலகங்களில் கடைப்பிடிக்க வேண்டிய இணைய பாதுகாப்பு நடைமுறைகள், தரவு தனியுரிமை மற்றும் பாதுகாப்பு சட்டம் 2023, மற்றும் இணைய குற்றங்கள் தொடர்பான புகார்கள் அளிக்கும் நடைமுறைகள் குறித்து விரிவான விளக்க உரை வழங்கவுள்ளனர். இந்த பயிலரங்கத்தின் ஒரு பகுதியாக பொறுப்பான டிஜிட்டல் குடிமகன் உறுதிமொழி எடுக்கப்படுவதுடன், பயிலரங்கில் பங்கேற்கும் அலுவலர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் இலவச ஆன்டி-வைரஸ் மென்பொருள் கருவிகள் வழங்கப்படவுள்ளன. மேலும், மாவட்ட ஆட்சியரகத்திற்குட்பட்ட அலுவலர்கள் அனைவரும் இப்பயிலரங்கில்கலந்துகொண்டு, பாதுகாப்பான இணைய பயன்பாடு தொடர்பான அறிவை மேம்படுத்திக் கொள்ளுமாறு அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.